V10T

விருதுநகர் மாவட்டம்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 10

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **8×1=8**

1) ''பாடுஇமிழ் பனிக்கடல் பருகி'' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

2) 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா' என்று பாராட்டப் பெற்றவர் .............

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் ஈ) நப்பூதனார்

3) 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது .............

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

4) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது .............

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

5) பெரிய மீசை சிரித்தார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை .............

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

6) ''அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்'' - இத்தொடர் இடம்பெறும் நூல் .............

அ) புறநானூறு ஆ) நற்றிணை இ) குறுந்தொகை ஈ) சிலப்பதிகாரம்

''முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆதிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு''

7) இப்பாடலில் இடம்பெறும் மோனை .............

அ) முத்தமிழ் - தேதமிழ் ஆ) அணைகிடந்தே - இணைகிடந்த

இ) முத்தமிழ் - முச்சங்கம் ஈ) மெத்த - நித்தம்

8) 'ஆழி' என்ற சொல்லின் பொருள் .............

அ) கப்பல் ஆ) கடல் இ) தமிழ் ஈ) முத்து

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **3×2=6**
**(13-ஆவது வினா கட்டாய வினா)**

9) **ஏற்ற வினா அமை:**

அ) 'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்கிறார் மகாகவி பாரதியார்.

ஆ) விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்துவிடக்கூடாது என்று எண்ணியவர் தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்.

10) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

11) தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக தொடரில் அமைக்க.

12) வசன கவிதை - குறிப்பு வரைக.

13) 'விடும்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **3×2=6**

14) **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக:**

அ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

ஆ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



15) **சொல்லில் மறைந்துள்ள தொகையினை அடையாளம் கண்டு தொடரில் அமை:**
அ) முத்துப்பல் ஆ) இன்சொல்

16) **பழமொழிகளை நிறைவு செய்க:**
அ) உப்பிட்டவரை ................
ஆ) அளவுக்கு ................

17) **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
அ) மலை - மாலை ஆ) விடு - வீடு

18) **கலைச்சொல் அறிக:**
அ) Conversation ஆ) Storm

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **4×3=12**
**(23-ஆம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

19) தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.

20) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

21) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

22) ''பலர்புழு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ'' - வினவுவது ஏன்?

23) ''சிறுதாம்பு தொடுத்த ..........'' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**V. விடையளி:** **2×5=10**

24) அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percusion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

25) அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. **(அல்லது)**

ஆ) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



**VI. விடையளி:** **1×8=8**

26) அ) 'புயலிலே ஒரு தோணி' கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன? **(அல்லது)**

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com